இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 104 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 08 – திங்கள்கிழமை 24 நவம்பர் 2025 – மதுரை 16 + 22 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 104: Thiruvalluvar Year - 2056 - Karthigai 08 - Monday 24 November 2025 - Madurai 16+22 Pages ₹ 5.00

## அறிவுத் திருவிழா எடுத்த நம் இயக்கத்தின்

# அறிவுமுகமாகத் தடம் பதித்தவர்!

## முரசொலிமாறன் நினைவுநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, நவ. 24-**

**“அறிவுத் திருவிழா எடுத்த நம் இயக்கத்தின் அறிவு முகமாகத் தடம் பதித்தவர் முரசொலி மாறன் அவர்கள்” என அவரது நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டினார்.**

முரசொலிமாறன் அவர்கள், “திராவிட இயக்க முன்னோடி, கழகத்தின் தூண், ஈடில்லா சிந்தனைச் செம்மல், மாபெரும் ராஜதந்திரி, முரசொலியின் பிதாமகன், கழகத்தின் மூளை, கலைஞரின் மனசாட்சி” என அடைமொழிகள் பலவற்றால் அன்பு தவழ அழைக்கப் பெற்றவர்.

தமது 35 ஆண்டு காலத் திற்கும் மேலான நாடாளு மன்ற அனுபவத்தால், நாடாளு மன்ற ஜனநாயக முறைகளை பழுதற உணர்ந்த, பேணிய பண்பாளர்.

மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சராக திறம்பட பணியாற்றி பெரும் புகழ் பெற்றவர்.

எழுத்தாளராக, பத்திரிகை யாளராக, திரைப்பட கதாசிரிய ராக, வசன கர்த்தாவாக, பாட லாசிரியராக, இயக்குநராக, தயாரிப்பாளராக பன்முகப் பரிமாணங்கள் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறையில் அதிகாரிகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளானவர்.

தன் இறுதிக்காலம் வரை கழகத்திற்கோ, தலைவருக்கோ, கிஞ்சித்தும் மாற்றுக் கருத்தோ, துரோக சிந்தனையோ இல்லா மல் கழகமே மூச்சென பணி யாற்றிய பண்பாளர் ஆவார். அவரது நினைவுநாள் நேற்றைய தினமாகும்.

### முதல்வர் சமூக வலைதளப் பதிவு!

முரசொலி மாறன் அவர் களின் நினைவு நாளை யொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-



**அ றி வு த் தி ரு வி ழ ா எடுத்த நம் இயக்கத்தின் அறிவுமுகமாக டெல்லி யிலும் தோகா மாநாட்டி லும் தடம் பதித்தவர் முரசொலி மாறன் அவர்கள்.**

**தலைவர் கலைஞரின் மனசாட்சியாகவும், கழகம் கடந்து வந்த நெருப்பாறு களின் வரலாற்று சாட்சியாக வும் நிலைபெற்ற முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளில் அவரது பணிகளைப் போற்றி வணங்குகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியில்

# கல்வி வளர்ச்சியில் முன்னணி வகிக்கும் தமிழ்நாடு!

## பள்ளிக் கல்வித் துறையில் புதுமைத் திட்டங்களை நிறைவேற்றிச் சாதனை!

**சென்னை, நவ. 24 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதுமுதல் பள்ளிக் கல்வித்துறை யில் எண்ணற்ற பல திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு நான்கரை ஆண்டுகளில் தமிழ்நாடு கல்வி வளர்ச்சியில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. அதன் விவரம் வருமாறு:-**



### இல்லம் தேடிக் கல்வித்திட்டம்!

திராவிட மாடல் அரசின் பள்ளிக் கல்வித் துறையில் கொரோனா காலக் கற்றல் இடைவெளியைக் குறைத்திட 19.10.2021 அன்று “இல்லம் தேடிக் கல்வி” திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 202122 முதல் 2024-25 ஆம் கல்வியாண்டு வரை ரூ,660.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இத்திட்டத்தில் 1.65 இலட்சம் தன்னார்வலர்கள் மூலம் 95.97 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். 2024-2025 ஆம் ஆண்டில் 50,000 இல்லம் தேடிக் கல்வி மையங்கள் 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வரை யில் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 7.97 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

### வாசிப்பு இயக்கம்!

அன்றாடம் வாசிப்புப் பழக்கத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வாசிப்பு இயக்கம் ஒரு முன்னோடித் திட்டமாக 11 மாவட்டங்களில் 11 ஒன்றியங்களில் தொடங்கப்பட்டு, 914 அரசு பள்ளிகளில் 4 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரையுள்ள 66,618 மாணவர்கள் பயனடைந்தனர்.

கோடை விடுமுறைக் காலத்தில், குழந்தைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கிலக் கதைகள் அடங்கிய தொடர் வாசிப்பு (ரீடிங் மாரத்தான்’) நிகழ்ச்சி நடை பெற்று அதன்மூலம் வாசிப்புப் பழக்கத்தை வழக்கப்படுத்திக்கொள்ள வழிகாட்டப்பட்டது. மாணவர்களின் கற்பனைத்திறன், படைப் பாற்றல் திறன், சிந்திக்கும் திறன்களை வெளிக்கொணரும் விதமாக இல்லம் தேடிக் கல்வி மையங்களில் குறும்படக் கொண்டாட்டம் நடத்தப்பட்டு மாணவர்கள் எழுச்சி பெற்றனர்.

### எண்ணும் எழுத்தும் திட்டம்!

1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளிடையே அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணறிவை மேம்படுத்தவும், ஒவ்வொரு குழந்தையும் 2025 ஆம் ஆண்டுக்குள் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்கணிதத் திறன்கள் அடைவதை உறுதி செய்யவும், “எண்ணும் எழுத்தும்” திட்டம் தொடங்கப் பட்டது.

1 முதல் 5 ஆம் வகுப்பு பயிலும் குழந்தை களுக்கு நிலை வாரியான (அரும்பு, மொட்டு, மலர்) பயிற்சி நூல்கள், ஆசிரியர்களுக்கு விரைவுத் துலங்கல் குறியீட்டுடன் கூடிய ஆசிரியர் கையேடுகள் போன்றவை அளிக்கப்பட்டுள்ளன. எண்ணும் எழுத்தும் திட்டத்தின் மூலம் 37,767 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 25.08 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

குழந்தைகள் அணுகக்கூடிய மொழியில் புத்தகங்கள் நுழை, நட, ஓடு, பற எனும் நான்கு தனித்தனி வாசிப்பு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டு, 123 புத்தகங்கள் மற்றும் 1 வாசிப்பு இயக்கக் கையேடு அச்சிடப்பட்டு அனைத்து அரசுப் பள்ளி களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 44.50 இலட்சம் மாணாக்கர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

### உள்ளடக்கிய கல்வி:

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களைச் சிறப்புப் பயிற்றுநர்கள் மூலம் அடையாளம் காணவும், அதன் அடிப்படையில் தக்க சிறப்புக் கல்வி வழங்கவும், “நலம் நாடி செயலி” வடிவமைக்கப் பட்டு பயன்படுத்தப் பட்டு வருகிறது.

202425 கல்வியாண்டில் பள்ளியிலேயே ஆதார் திட்டத்தின் மூலமாக அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 76,56,074 மாணவர்களுக்கு ஆதார் புதுப்பித்தல் மற்றும் புதிய ஆதார் பதிவு மேற் கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 36,91,318 மாணவர்களுக்கு ஆதார் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 38 மாதிரிப் பள்ளிகள்!

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பள்ளி வீதம் மொத்தம் 38 மாதிரிப் பள்ளிகள் ரூ.352.42 கோடி செலவில் ஏற்படுத்தப்பட் டுள்ளன. மாதிரிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் பலர் பல்வேறு முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர்.

### 28 தகைசால் பள்ளிகள்!

மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் கற்றல் எல்லைகளை விரிவுபடுத்த இப்பள்ளி கள் தளமாக விளங்குகின்றன. 28 மாவட்டங் களில் மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம், 28 பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக ரூ.100.82 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### கலைத் திருவிழா!

குழந்தைகளிடம் மறைந்திருக்கும் கலை உணர்வுகளை வெளிக்கொணரும் நோக்கில் பள்ளிகளில் கலைத் திருவிழாக்கள் நடத்தப் படுகின்றன. 2022 - 2023 ஆம் ஆண்டில் போட்டிகள் நடத்தப்பட்டு, 2024-25ஆம் கல்வியாண்டு முதல் இத்திட்டம் 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

2022-23 ஆம் ஆண்டில் 1759 மாணவ மாணவியர்களும், 202324ஆம் ஆண்டில் 1418 மாணவ மாணவியர்களும், 2024-25 ஆம் ஆண்டில் 1334 மாணவ மாணவி யர்களும் மாநில அளவில் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கலையரசன், கலையரசி விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்!

பள்ளிகளில் ஆய்வகங்கள் மூலம் மாணவர்களின் ஆய்வுத் திறன்கள் மேம் படுத்தப்படுகின்றன. அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.519.73 கோடி மதிப்பீட்டில் 8,209 உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் (HiTech Lab) அமைக்கப் பட்டுள்ளன.

### திறன்மிகு வகுப்பறைகள்!

அரசுப் பள்ளிகளில் பயிலும் 16,77,043 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.455.32 கோடி செலவில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classroom) அமைக்கப்பட்டுள்ளன.

### தொழிற்கல்வி பாடத்திட்டம் மறுசீரமைப்பு!

2021 - 22 ஆம் கல்வியாண்டு முதல் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புக் கான சீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத் திட்டம் மற்றும் பாடப் புத்தகங்கள்

தொடர்ச்சி 4 -ஆம் பக்கம்